08.04.2025.

கூடுதல் அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் விழுப்புரம் )

அமர்வு வழக்கு எண்.107/2018

அ.சா. 20

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலிய மூர்த்தி | | |
| த/பெ | மாணிக்கம் | | |
| கிராமம் | கண்டம்பாக்கம் | தொழில் | செங்கல் சூலையில் கல் அறுக்கும் வேலை |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 60/2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கைரேகை என்னுடையதுதான். சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் என்னிடம் காவல்துறையினர் வந்து கைரேகை வாங்கிச் சென்றார்கள். எதற்காக என்று தெரியவில்லை. அதில் ஏதாவது இருசக்கர வாகனம் குறித்து காண்பிக்கப்பட்டுள்ளதா? என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்தார்களா? என்றால் இல்லை.

மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்ததன் பேரில், சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்படுகிறார் )

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

கடந்த 29-08-2014 ஆம் தேதி எங்கள் ஊரைச் சேர்ந்த முருகன் ஒரு கொலை வழக்கு சம்பந்தமாக கடந்த 03-10-2014-ம் தேதி காலை 11:30 மணியளவில் தாலுக்கா காவல்

ஆய்வாளர் எதிரி அன்பரசு என்பவரை கைது செய்து விசாரித்த போது, அவர் தான் பயன்படுத்திய பி ஒய் 01 பிஏ 6187 என்ற பதிவெண் கொண்ட ஸ்பிளண்டர் இருசக்கர வாகனத்தை எங்கள் முன்னிலையில் போலீசார் எதிரியிடமிருந்து கைப்பற்றி அந்த இடத்தில் தயார் செய்த கைப்பற்றுதல் மகசரில் நானும், எங்கள் ஊரைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவரும், சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும், போலீசார் விசாரணையை சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மை சம்பவத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

இல்லை